# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,185 — 1960 අගෝස්තු 19 වැනි සිකුරාදා — 19.8.1960

12,185 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)— விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 205 | ஆ விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உததியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விபபத்திர அறிவித்தல்கள் .. .. | 206 | அ நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 209 | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### தபாற் தந்திப் பகுதி 2 ந் தர முகாரி—காலித்தானம்

தபாற் தந்திப் பகுதியின் மோட்டார் தபால் ஏற்றி இறக்குப் பிரிவின் 2 ந் தர முகாரியின் காலித்தானத்திற்கான விண்ணப்பங்கள், 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

முழு விபரங்கட்கு இதே வர்த்தமானியின் விளம்பரங்களின் (ஆங்கிலம்) II ம் தொகுதி I ம் பகுதியைப் பார்க்கவும்.

எச். ஈ. செனவிரத்தின,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

தபாற் கந்தோர்த் தலைமை
அதிபதியின் காரியாலயம்,
பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1.

---

### பாணந்துறை, வியாங்கொடை, ஜா எலை நிலையங்களுக்கிடையில் தன்னியக்க நிறவெளிச்சச் சைகை காட்டலும் போக்குவரத்துக் கட்டுப்பாடும்

மேற்படி திட்டத்தின் கீழ் முகாரி (தற்காலிகம்)ப் பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன :—

2. விண்ணப்பக்காரர்கள் கீழே காட்டப்பெறும் மூன்று தராதரங்களையும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(அ) புகையிரதப் பாதுகாப்பு உபகரணம், டெலிபோன் தளபாடம், நிறுவுதலிலும், இவற்றேடு அல்லது இவற்றிற்குப் பதிலாக் தன்னியக்க டெலிபோன் தளபாடம் அமைத்தல் இதனேடு அல்லது இதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் கீழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு கம்பனியின் கீழ் 10 வருடத்திற்குக் குறையாமல் ஆற்றுக் கம்பிகள் புதைப்பதில் பயிற்சியுடையவராயிருத்தல் ;

(ஆ) இப்படிப்பட்ட வேலையில் 3 ஆண்டுக்குக் குறையாமல் தனிப்பொறுப்பேற்று நடத்தியிருத்தல் ;

(இ) உறுதியான உடம்பும், நேர் மேலதிகாரியிடம் பெற்ற சான்றிதழ்களையும் பெற்றிருத்தல்.

3. விண்ணப்பங்கள் இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதித் தலைமை அதிபதியின் அலுவலகத்தில் 2.9.1960 ந் திகதி பிற்பகல் 4.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கவேண்டும். தேவைப்பட்டால் விண்ணப்பக்காரர்கள் தங்கள் செலவில் இதற்காக ஏற்படுத்தப்படும் தெரிவுக்குழுவின் முன் தோற்றுதற்குரியவர் :—

4. விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை பொருளளவில் ஒத்திருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பிக்க வேண்டும். புகையிரதப் பகுதி அலுவலாளர்கள் தங்கள் துணைத் திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

5. தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் கண் பார்வை சோதனை உட்பட ஒரு வைத்தியசோதனையில் தேறுவார்களாயின் தீவின் எப்பாகத்திலும் சேவைசெய்ய நியமனம் குறுகிய அறிவித்தலில் ஏற்றற்குரியர். அரசாங்கத்தின் கீழ் நிரந்தர அலுவலில் அமர்ந்துள்ளோர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் உபகார வேதன உரிமைகள் பாதுகாத்து வழிப்படுத்திய நியமனம் பெறுவர்.

6. தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி ரூபா 2,000 தொகையை பிணையாகக் கட்டும்படி கேட்கப்படுவர்.

7. இப்பகுதிக்குரிய சம்பளம் பின்வருமாறு :—

I ம் தரம் ரூபா 3,900 — 180 — 5,340 வருடத்திற்கு
II ம் ,, ,, 1,860 — 120 — 3,780 ,,

I ம் தரம் அல்லது II ம் தரத்திற்குரிய நியமனத்திற்கு, பொருத்தம் அனுபவம் நேர்முகத் தேர்வுச் சபையின் தீர்ப்பு எனும் இம்மூன்றிலுமே தங்கியிருக்கும்.

8. இந்தச் செய்திமடலின் I ம் பாகம் II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களைப் பற்றிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படியும் குறிப்பிடுகிறேம்.

பி. டி. ரம்பால,
தலைமை அதிபதி.

தலைமை அதிபதியின் அலுவலகம், கொழும்பு,
1960 ம் ஞு ஆகஸ்டு மீ 10 ந் உ.

### மாதிரிப் படிவம்

**முகாரி (தற்காலிக)ப் பதவிகள்—தன்னியக்க நிறவெளிச்ச சைகை காட்டல்—போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் திட்டம்**

1. முழுப் பெயர் : ———— .
2. பிறந்த நாள் : ———— . 1960 ம் திகதியில் வயது வருடம் : ———— மாதம் : ————.
3. இப்போதைய தொழிலும் அலுவலக முகவரியும் : ———— .
4. கல்வித்தகைமைகள் : ———— .
5. தொழில் நுட்பத்தகைமைகள் : ———— .
   (சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்)
6. அனுபவம். (விரித்தெழுதுக) : ———— .

இவ்விண்ணப்பத்தில் என்னுல் தரப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் இவற்றுள் யாதாயினும் பொய்யானதென்று நிரூபிக்கப்பட்டால் என்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவேனென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————————
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

**குறிப்பு.**—படிவம் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பக்காரரின் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

மேற்குப்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர் கொட்டா தெரு, கொழும்பு 8 ல் இருக்கும் தமது காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 13 ந் திகதி 11·30 மணிவரை சப்பிரகமுவ மாகாணத்தைச்சேர்ந்த இரத்தினபுரியிலுள்ள தும்மோதறை அணைக்கட்டுத்திட்டம் கட்டுவதற்கு கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வார்.

இரத்தினபுரிச் சிறுபகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறக் கூடிய கேள்விப்பத்திரங்களில் இரு பிரதிகளில் சீலிடப்பட்ட கடிதமூலம் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை மேற்கூறிய காரியாலயத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் 15,000 ரூபாய்க்கும் அதற்குமேல் பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப்படுத்தும் கொந்தராத்துக்காரர்கட்கு 25 ரூபா கச்சேரியில்கட்டி ரசீது பெற்று சமர்ப்பிப்பவர்கட்கு 22.8.1960 தொடக்கம் 10.9.1960 வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அரசாங்கத்தில் தற்பொழுது கொந்தராத்துவேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகத்தரிடமிருந்து வேலை நன்முறையில் நடைபெறுகிறதற்கு அத்தாட்சியாக நற்சாட்சிப்பத்திரம் பெற்று கேள்விப்பத்திரங்கட்கு மனுச்செய்யும்பொழுது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் எற்றுக் கொள்வதற்கோ அல்லது மறுப்பதற்கோ அல்லது ஒரு பகுதியை மட்டுந்தான் ஏற்றுக்கொள்ளவோ சகலஉரிமையும் உடையதென இத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசன எஞ்சினியர், இரத்தினபுரிச் சிறு பகுதி.

---

## நீர்ப்பாசன இலாகா

மேற்குப்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர் கொட்டாதெரு, கொழும்பு 8 ல் இருக்கும் தமது காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 13 ந் திகதி மு. ப. 11.30 மணி வரை சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள இரத்தினபுரியில் புகையிரத பண்டசாலையிலிருந்தும் நீர்ப்பாசன பண்டசாலையிலிருந்தும் வேலைத்தளங்களுக்கு பொருட்கள் ஏற்றிச்செல்வதற்கு கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்வார்.

இரத்தினபுரி சிறுபகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் இரு பிரதிகளில் சீலிடப்பட்ட கடிதமூலம் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். மேலதிக விபரங்கட்கு மேற்கூறிய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நீர்ப்பாசன இலாகாவில் 10,000 ரூபாய்க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப்படுத்தும் கொந்தராத்துக்காரர்களுக்கு 25 ரூபா கச்சேரியில் கட்டி ரசீது பெற்று சமர்ப்பிப்பவர்கட்கு கேள்விப்பத்திரம் 22.8.1960 தொடக்கம் 10.9.1960 வரை வழங்கப்படும்.

அரசாங்கத்தில் தற்பொழுது கொந்தராத்துவேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வேலை நன்முறையில் நடைபெறுகிறதற்கு அத்தாட்சியாக நற்சாட்சிப்பத்திரம் பெற்று கேள்விப்பத்திரங்கட்கு மனுச்செய்யும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுப்பதற்கோ அல்லது ஒருபகுதியை மட்டும்தான் ஏற்றுக்கொள்ளவோ சகல உரிமையும் உடையதென இத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசன எஞ்சினியர்,
இரத்தினபுரிச் சிறுபகுதி.

---

## நீர்ப்பாசன இலாகா

கொட்டாரேட், கொழும்பு 8 ல் உள்ள மேல்பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், இரத்மலானை தொழிற் சாலையிலுள்ள போக்கு வரத்துச்சாலைக்குப் பாதை அமைப்பதற்கு, நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000 அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 13.9.60 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணி வரை மெழுகுமுத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வார்.

யாவத்தரேட், கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உபபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்பத்திரங்களில் இணைப் பிரதிகள் மூலம் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். இவ்வேலைக் குரிய மாதிரிப்படங்களைப் பார்வையிடவும் மற்றும் விபரங்களை அறிந்து கொள்ளவும் முடியும்.

கேள்விப் பத்திரங்களைக் கட்டிட உபபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் 9.9.60 வெள்ளிக்கிழமைவரை அலுவலக வேலை நேரங்களில் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000 அல்லது கூடிய தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களென அத்தாட்சியுடைய ஒப்பந்தக்காரர்கள் கச்சேரியில் அல்லது யாவத்தரேட், கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உபபகுதிக் காரியாலயத்தில் ரூபா 25 முற்பணமாகக்கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத்துக்கு எவ்வித கேள்வியுமின்றி கேள்விப் பத்திரத்தை முற்றாக அல்லது பகுதியைமட்டும் நிராகரிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் உரிமையுண்டு.

விண்ணப்பதாரிகள் தற்பொழுது ஏதாவது வேலை ஒப்பந்தமுடையவர்களாயிருப்பின், அவர்கள் தாங்கள் செய்யும்வேலை திருப்திகரமாக நடைபெறுகிறதென்று சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்றுத்தங்கள் விண்ணப்பப்பத்திரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

வி. குமார சுவாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கட்டிட உபபகுதி.

நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம்,
யாவத்தரேட், கொழும்பு 5,
1960 ம் ஷூ ஆகஸ்டு மீ 13 ந வ.

---

## நீர்ப்பாசன இலாகா

### திருகோணமலை உப பகுதி

15.7.60 ல் வெளியான அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, முதலிக்குளத்தின் தண்ணீர்க்கரைக் கட்டை நீர் அலை அரிக்காது பாதுகாக்கக் கருங்கல் பதிப்பதற்கு கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ம் திகதி, புதன்கிழமை காலை 10 மணிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் 29.8.60 வரை பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவசுப்பிரமணியம்,
உப நீர்ப்பாசனக் கந்தோர் அதிபர்,
திருகோணமலை உப பகுதி.

உள்துறைமுகத் தெரு,
திருகோணமலை, 9.8.60.

---

## நீர்ப்பாசன இலாகா

வடமேல்மாகாண பெரும்பாக நீர்ப்பாசன எஞ்சினியர் குருநாகல் தொகுதியிலிருக்கும் கக்வட்டுன ஓயாவேலைத் திட்டத்திற்குரிய சாமான்கள் ஏற்றி இறக்குவதற்காக 1960 ம் ஆண்டு ஆவணி 31 ம் திகதி காலை 9.30 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுவார்.

கேள்விப் பத்திரம், கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளரிடம் இருந்து கேள்வித்தாள்களைப்பெற்று இரு தாள்களில் மனுச் செய்தல் வேண்டும். வேண்டிய விபரங்களை கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் பார்க்கலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,000 அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டனர் என்று அத்தாட்சி பண்ணும் ஒப்பந்தக்காரருக்கு மட்டும் நீர்ப்பாசன பொறியியலாளர் 1960 ம் ஆண்டு ஆவணி 30 ம் திகதி நண்பகல் 12 மணி வரையும் கேள்வித்தாள்கள் வழங்குவார். இவர்கள் நீர்ப்பாசன அதிபர் சார்பில் ரூபா 25 இந்த வேலைக்கு முற்பணமாகக் கச்சேரியில் கட்டி பற்றுச் சீட்டை கேள்வித்தாள்களுக்கு மனுச் செய்யும்பொழுது காட்டவேண்டும்.

கே. செல்வராசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கக்வட்டுன ஓயாத் திட்டம்.

நீர்ப்பாசன அலுவலகம்,
கக்வட்டுன ஓயாத் திட்டம், மகுல்பொத்த,
இப்பகமுவ.

## நீர்ப்பாசனப் பகுதி

வட மத்திய பகுதி நீர்ப்பாசன மாவட்ட இஞ்சினியரால் பின்வரும் சேவைகட்கு விண்ணப்பப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ந் தேதி காலே 9.30 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| சேவையின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | கட்டுப்பணம் ரூபா |
|---|---|---|
| கேள்விப்பத்திர இலக்கம் RL/9 | | |
| இராஜாங்கணேத்திட்டத்தில் நிரந்தரக் காரியாலயம் அமைத்தல் .. | 50,000 .. | 50 |
| கேள்விப்பத்திர இலக்கங்கள் RL/10—RL/11—RL/12-RL/13 | | |
| இராஜாங்கணேத் திட்டத்தில் நான்கு குறை நிரந்தர வாடிவீடுகள் அமைத்தல் (நான்கு கேள்விப்பத்திரம்) | 15,000 .. | 25 |

2. மேற்குறிக்கப்பட்டிருக்கும் தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டும் விண்ணப்பம் செய்யலாம்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இராஜாங்கணே உபபகுதி இஞ்சினியரிடம் பெற்றுக்கொண்ட தாள்களில் இரு பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். மேற்படி இஞ்சினியரிடம் மற்றும் விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பப்பத்திரங்கள் 20.8.60 லிருந்து 12.9.60 வரையும் காரியாலய நேரங்களில் மேற்படி இஞ்சினியரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன காரியாலயம், தம்புத்தகம,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 11 ந் வ.

ரீ. ஆர். டி சில்வா,
நீர்ப்பாசன இஞ்சினியர், இராஜாங்கணே உபபகுதி.

---

## நீர்ப்பாசனப் பகுதி

வடமத்திய பகுதி நீர்ப்பாசன மாவட்ட இஞ்சினியரால் பின்வரும் சேவைகட்கு விண்ணப்பப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 14 ந் தேதி காலே 9.30 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| சேவையின் விபரம் | பதிவுத் தொகை | கட்டுப் பணம் |
|---|---|---|
| (1) உஸ்கலே சியம்பலங்கமுவ வலது பாகப் பெரும் வாய்க்காலில் மேற்கடவை அமைத்தல் | 50,000 .. | 50 |
| (2) வான் அத்திவாரம் கொங்கிறீற் வேலே அங்க முவக் குளம் | 45,000 .. | 50 |

2. மேற்குறிக்கப்பட்டிருக்கும் தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டும் விண்ணப்பம் செய்யலாம்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் இராசாங்கணே உப பகுதி இஞ்சினியரிடம் பெற்றுக் கொண்ட தாள்களில் இரு பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். மேற்படி இஞ்சினியரிடம் மற்றும் விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பப் பத்திரங்கள் 20.8.60 ல் இருந்து 12.9.60 வரையும் காரியாலய நேரங்களில் மேற்படி இஞ்சினியரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ரீ. ஆர். டி. சில்வா,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
இராசங்கணே உபபகுதி.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
தம்புத்தகம,
6.8.60.

---

## கடற்றெழிற் பகுதி

### இரு உயிர்காப்புப் படகுகள் விநியோகத்திற்காய கேள்விகள்

கொழும்பு 1 இலுள்ள விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மின்சார அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் இரு உயிர்காப்புப் படகுகள் விநியோகத்திற்காய கேள்விகள் 14.9.60 ம் திகதி நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 250.

கடற்றெழிற் பகுதி,
காலி முகம், கொழும்பு 3,
11.8.60.

டி. ரி. ஈ. ஏ. டீ. பொன்சேக்கா,
கடற்றெழில் அதிபர்.

---

## கடற்றெழிற் பகுதி

### துணி சலவை செய்வதற்காய கேள்விகள்

காலி முகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றெழில் அதிபரவர்களால் துணி சலவை செய்வதற்காய கேள்விகள் 14.9.60 ம் திகதி மு.ப. 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 25.

கடற்றெழிற் பகுதி,
காலி முகம், கொழும்பு 3,
11.8.60.

டி. ரி. ஈ. ஏ. டீ. பொன்சேக்கா,
கடற்றெழில் அதிபர்.

---

## உணவு அனுப்பல்

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிக்குள்ளான காலத்தில் கீழ்காணும் சேவை புரிவதற்கான கோரிக்கைகள் வர்த்தக், வியாபார, உணவு கப்பற்பகுதி அமைச்சின் (உணவுப் பிரிவு) கோரிக்கைச் சபைத் தலைவரால், த.பெ. இலக்கம் 569, கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கம் என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சேவைகள்.**—உணவுப் பொருட்களைக் கப்பலிறங்குந்துறை, சாமோர்ஸ் களஞ்சியம், ஏனைய கொழும்பிலுள்ள இளைப்புப்பண்டசாலைகளான வெள்ளவத்தை, மாளிகாவத்தை, கொலன்னுவை, பெப்பிலியான ஆகியவைகளிலிருந்து, விநியோக நிலையங்களுக்கும், அல்லது கொழும்பிலிருந்து 40 மைல் விட்டாரத்தத்துக்குள்ளான வட்டாரங்களிலுள்ள கூட்டுறவுச் சமாசங்களுக்கும் லொறிகள் மூலம் எடுத்துச் செல்லல்.

வட்டாரம் I : வியாங்கொடை, வறக்காப்பொளை, நீர்கொழும்பு, ஜாஎலே.

வட்டாரம் II : களுத்துறை, அளுத்கம, கறவனெல்ல.

குறிப்பு.—ஒவ்வொரு கோரிக்கைக்காரரும் ஒரு வட்டாரத்துக்கோ அல்லது இரண்டு வட்டாரத்துக்குமோ கோரிக்கைகள் செய்யலாம்.

1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரைக்கும் கொழும்பு, யூனியன் பிளேஸ் 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூபா 250 கொடுத்துப்பெற்ற பற்றுச் சீட்டைக் காண்பித்தும், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக் கூடிய விபரங்களடங்கிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அங்கம் 2 ஐ நிவிர்த்தி செய்வதன் மூலமும் கோரிக்கைப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்கள் உணவு அதிகாரியின் காரியாலயத் திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

கொழும்பு, யூனியன் பிளேஸ்,
330 ம் இலக்கம்,
1960 ம் ஆண்டு ஒகஸ்டு மீ 9 ந் வ.

---

## உணவுப் பகுதி

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி வரையுள்ள காலத்தில் கீழ்காணும் சேவை புரிவதற்கான கோரிக்கைகள் வர்த்தக வியாபார, உணவு கப்பற்பகுதி அமைச்சின் (உணவுப் பிரிவு) தபாற் பெட்டி இலக்கம் 569, கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கம் என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

சேவை : மாப் பால் சேர்ந்த உணவுப் பொருட்களை காலி சுங்கத் துறையிலிருந்து பூஸா பண்டசாலைகளுக்கு லொறிகள் மூலம் எடுத்துச்செல்லல்.

1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும், கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூபா 250 கொடுத்துப் பெற்ற பற்றுச்சீட்டைக்காண்பித்தும், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விபரங்களடங்கிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அங்கம் 4 ன் II ம், III ம் பகுதிகளை நிவிர்த்தி செய்வதன் மூலமும் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் உணவு அதிகாரியின் காரியாலயத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

கொழும்பு, யூனியன் பிளேஸ்,
1960 ம் ௵ செப்ரெம்பர் ௴ 9 ந் ௳.

---

## உணவுப் பகுதி

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிக்குள்ளான காலத்தில், கீழ்காணும் சேவைகள் புரிவதற்கான கோரிக்கைகள் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் பகுதி அமைச்சின் (உணவுப்பிரிவு) கோரிக்கைச் சபைத் தலைவரால் தபாற்பெட்டி இலக்கம் 569, கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கம் என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

*சேவை.*—பிரதானமாக அரிசி, மா, சீனியைக் கொண்ட உணவுப் பொருட்களை கொழும்புத் துறைமுகத்திலுள்ள ஏற்றிறக்குமதி பண்ணும் செய்கரைகளிலிருந்து உணவு அதிகாரியின் பண்டசாலைகளான சாமோர்ஸ் களஞ்சியம், மனிங் மார்க்கட், வெள்ளவத்தை, மாளிகாவத்தை, கொலன்னாவை, பெப்பிலியான, வியாங்கொடை முதலிய இடங்களுக்கு லொறிகள் மூலம் கொண்டு செல்லல். சாமோர்ஸ் களஞ்சியத்தையும், மனிங் மார்க்கட்டையும் தவிர்ந்த மற்றைய உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டசாலைகள் எல்லாவற்றிற்கும் ஒரு தொன்னுக்கு ஒரு மைலுக்கான தொகையை மேற்கோள் செய்தல் வேண்டும். சாமோர்ஸ் களஞ்சியத்திற்கும், மனிங் மார்க்கட்டிற்கும் முழுத் தூரத்திற்கும் தொன் ஒன்றிற்கான தொகையைக் குறிப்பிட வேண்டும். அரிசி, பொதுவாக 160 இருத்தல் அடங்கிய மூடைகளாகவும் மா 150 இருத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும் இருக்கும். வேண்டியுள்ளபடி குறைந்தது 10 லொறிகளைச் சொந்தமாக உடையவராகவும் அல்லது வாடைக்கமர்த்தும் தகைமையுடையவராகவும், தம் வசமுள்ள போக்கு வரத்து வசதிகளுடன் ஒப்பந்தத்தை நிவிர்த்தி செய்யக்கூடிய நிலைமையிலுள்ளவரிடமும் இருந்து மட்டுமே கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரைக்கும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூபா 250 கொடுத்துப் பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பித்தும், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விபரங்களடங்கிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 4 ம் அங்கத்தின் (ii) ம் (iii) ம் பகுதிகளை நிவிர்த்தி செய்வதன் மூலமும், கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை உணவு அதிகாரியின் காரியாலயத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

உணவு அதிகாரியின் காரியாலயம்,
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2,
1960 ம் ௵ ஒகஸ்டு ௴ 9 ந் ௳.

---

## உணவு அதிகாரியின் காரியாலயம்

### வியாங்கொடை உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டசாலையில் வேலை செய்வதற்குத் தொழிலாளர் வழங்குதற்கான கோரிக்கைகள்—1960/61

வியாங்கொடை உணவுக்கட்டுப்பாட்டுப் பண்டசாலையில் வேலை செய்வதற்குத் தொழிலாளர் வழங்குதற்கான கோரிக்கைகள், வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்பகுதி அமைச்சின் கோரிக்கைச் சபைத்தலைவரால் கொழும்பு 2, யூனியன் பிளேஸிலுள்ள 330 ம் இலக்கத்தில் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ந் திகதி, பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கோரிக்கைகள் 1960 ம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 12 ந் திகதி, நண்பகல் 12 மணிவரை உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய பத்திரத்தில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். பிரத்தியேக விண்ணப்பப் பத்திரத்திலல்லாத கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூபா 250 செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பித்துக் கோரிக்கைப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

3. இக்கோரிக்கை பற்றிய விபரங்களடங்கிய பத்திரத்தை கொழும்பு 2, 330, யூனியன் பிளேஸில் உள்ள உணவு அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்,
உணவு அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ௵ ஆகஸ்டு ௴ 11 ந் ௳.

---

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### உணவுப் பொருட்களும் "கெயர்" பால் மாவும் ஏற்றிச் செல்லவும் கையாளுவதற்குமான 1960/61 ம் ஆண்டின் கேள்விப் பத்திரங்கள்—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்கு நிதிவருடம் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரை உணவுப் பொருட்களும் "கெயர்" பால் மாவும் ஏற்றிச் செல்லவும் கையாளுவதற்குமான கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ந் திகதி முற்பகல் 10 மணிவரை மன்னார் உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் புதிதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மன்னார் கச்சேரியிலுள்ள உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் காரியாலயத்தில் பெறப்படும் மாதிரிப் பத்திரங்களில் கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் தாக்கல் செய்யப்படவேண்டும். கேள்விப் பத்திரங்களின் மாதிரிப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1 ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். அவை கேள்விப் பத்திரங்களுக்குரிய கட்டுப்பணமாகிய ரூபா 50 (ஐம்பது ரூபா) மன்னார் கச்சேரியில் கட்டப்பெற்று அதற்கான பற்றுச்சீட்டு காண்பிக்கப்பட்ட பின்பே விநியோகிக்கப்படும்.

3. மேலும் விபரங்களை மன்னார் உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் அறிந்துகொள்க.

ச. பரமநாதன்,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
மன்னார் மாவட்டம்.

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. கேள்விப்பத்திர சபைத் தலைவர், 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ந் திகதி மு. ப. 10 மணிவரை, காரியாலயம், இருப்புப் பொருட் சாலை, உராய்வுநீக்கி அறை, மேற்பட்டி ஆகியனவற்றை கண்டி வடக்கு மாவட்ட கராஜில் அமைப்பதற்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ, வெரஹெரை இ. போ. ச. பிரதி பிரதான (சிவில்) எஞ்ஜினியருக்கு விண்ணப்பிக்கவும்.

ரூபா 75,000 க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரே கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றோலைகள், பொரலஸ்கமுவ, வெரஹெரை இ. போ. ச. பிரதி பிரதான (சிவில்) என்ஜினியரின் பரிசோதனைக்கும் அங்கீகாரத்துக்கும் காட்டப்படவேண்டும். அப்படியான சான்றோலைகள் பிரதி பிரதான (சிவில்) என்ஜினியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதான கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 200 ஐக் கட்ட வேண்டும்.

கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டுவதன்பேரில் பிரதி பிரதான (சிவில்) என்ஜினியர், 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ம் திகதிவரை கேள்விப்பத்திரங்களை வழங்குவார். இவரிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் சமர்ப்பிக்கவேண்டும்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

1960 ம் ௵ ஆகஸ்டு ௴ 11 ந் ௳.

### அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் ஆய்வுகூடத்தில் புகைபோக்கி (பியூம்கபோட்ஸ்) இணைப்பதற்கான கேள்விப்பத்திரம்

அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் மேற்படி இரண்டு புகைபோக்கி "பியூம்கபோட்ஸ்" தமது ஆய்வுகூடத்தில் இணைப்பதற்கு 26.8.1960 காலை 10 மணி வரையில் ஒப்பந்தக்காரரிடமிருந்து மெழுகிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

2. திறைசேரி அல்லது கச்சேரி அல்லது இக்கந்தோரில் ரூபா 25 கட்டிப் பெற்றுக்கொண்டதான பற்றுச்சீட்டையுடைய ஒப்பந்தக்காரருக்கே இரு பிரதிகொண்ட வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலமோ அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களைக் கொண்ட தபாலுறையின் மேலிடது பக்கத்தில் வேலையின் பெயர் தெளிவாக எழுதப்படவேண்டும்.

4. ஒப்பந்தக்காரர் நேரில் வந்து வேலைத்தலத்தையும் வேலையின் முழுவிபரத்தையும் பூரணமாக அறிந்த பின்பே தங்கள் ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. எந்த ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தையும் எவ்வித காரணமும் காட்டாது ஏற்க மறுக்கும் உரிமை அரசாங்க இரசாயனப் பகுப்பாளருக்குண்டு.

ஜீ. ஏ. சி. சிறிமான,
அரசாங்க இரசாயன பகுப்பாளர்.

றொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.

## பொருட்கள் விற்பனையும், பிறவும்

### விளம்பரம்

#### பாவித்த பொருட்கள் ஏலத்தில் விற்பனை

1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ந் திகதி புதன்கிழமை பிறபகல் 2 மணியளவில் இலங்கை வானொலிப் பண்டகசாலை முன்றிலில் ஓர் பகிரங்க ஏல விற்பனை நடைபெறும்.

விற்பனைக்கு இருக்கும் பொருட்களில் சில பின்வருமாறு :—

(1) மின்சார ஆமார்.

(2) வால்வ்ஸ்.

(3) ரையர்கள் முதலியன.

பொருட்களை வாங்குபவர்கள் அதற்குரிய பணத்தை உடனே செலுத்தி விற்பனை முடிவடைந்ததும் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். அன்று காலை 10 மணி முதல் சகல பொருட்களும் பார்வைக்கு வைக்கப்படும்.

ரி. ஈ. குணரத்தின,
ஒலிபரப்பு மா அதிகாரி.

றொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது